நாள் 17.12.2024

SC.113/2021
பெயர் பிரசாந்த்
அ.சா.6

<u>குறுக்கு விசாரணை</u>

என்னை போலிசார் விசாரிக்கும்போது நான் இரண்டு பக்கத்தில் இரண்டு கையெழுத்து போட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் காவல்நிலையத்தில் வைத்து எந்தகையெழுத்தும் போடவில்லை. என் முன்பு வைத்து தான் sumsung செல்லை பாண்டியராஜன் எடுத்து காவல்துறையிடம் கொடுத்தார். அந்தஇடத்தில் நானும் எனது நண்பர் சரத்குமாரும் இருந்தோம். மற்றும் காவல்துறையினர் இருந்தார்கள். வேறு யாரும் இல்லை. அ.சா.1 யார் என்று எனக்கு தெரியாது. நான் அன்று தான் எதிரி பாண்டியராஜனை முதன் முதலில் பார்த்தேன். அ.சா.1 சாமி எனது நண்பர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நாள் 17.12.2024
SC.113/2021
பெயர் சரத்குமார்
அ.சா.7
<u>குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை விசாரிக்கும்போது எத்தனை பக்கத்தில் பகயெழுத்து போட்டோம் என்று ஞாபகம் இல்லை.என் முன்பு போலிசார் ஒரு செல்போனை கைப்பற்றினார். எனது உடன் வந்த அ.சா.6 பிரசாந்த்தை தவிர வேறு யாரும் கையொப்பம் போடவில்லை. நாங்கள் இரண்டு நபர்களும் கையொப்பம் போட்ட ஆவணம் நீதிமன்றத்தில் இல்லை. நான் அ.சா.1 எனக்கு வேண்டிய நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரி பாண்டியராஜன் யார் என அடையாளம் காட்ட சொன்னபோது இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜரான நீலநிற சட்டை அணிந்திருந்த நபரை அடையாளம் காட்டி அவர் தான் பாண்டியராஜன் என கூறினார். சம்பவத்திற்கு முன்பு பாண்டியராஜன் யார் என எனக்கு தெரியாது. இதற்கு முன்பு நான் பாண்டியராஜனை பார்த்திராத நிலையில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.